1979 மார்ச் 30]

வசூலிக்கும் வரியில் 75 சதவீதத்தை மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் டெல்லி நிதி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது திட்டம் வரையறை செய்யப்படவில்லை. இப்போது திட்டம் வரையறை செய்யப்படும் வாய்ப்பு வந்திருக்கிறது. ஆகையால் தான் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் 'காட்கில் ஃபார்முலா' படி ஆரம்பத்தில் ஓரளவு நிதி ஒதுக்கித் தந்தார்கள். பின்னர் 2,500 கோடி ரூபாயை மத்திய சர்க்காரிலிருந்து மாநிலங்களுக்கு கூடுதலாக அனுப்பித் தரவேண்டுமென்ற தீர்மானத்தின் அடிப் படையில் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அது முடிந்த பிரச்சனை.

திண்டிவனம் தொகுதியில் மின் தொடர்பு துண்டிப்பு.

*வினா எண். 562—திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மின்துறையினரால் வீடு, கடைகளுக்கு தரப்பட்டிருந்த விளக்குகளுக்கு உண்டான மின் தொடர்பை எவ்வித அறிவிப்பும் இன்றி பீஸ் கேரியரை எடுத்துச் செல்வது நமதரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் 1977 ஜனவரி முதல் 1978 ஜனவரி முடிய திண்டிவனம் தொகுதியில் எத்தனை இடங்களில் பீஸ் கேரியர் எடுக்கப்பட்டன ?

(இ) எத்தனை இடங்களில் எடுக்கப்பட்ட பீஸ் கேரியர் திருப்பி தரப்பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அவ்வாறு செய்யப்படுவதில்லை.

(ஆ) & (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

கடல் நீரின் வெப்ப வேறுபாட்டிலிருந்து மின் உற்பத்தி.

* வினா எண். 563—திரு. என். லட்சுமிநாராயணன் & திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சூரிய வெப்பத்தால் ஏற்படும் கடல் நீர் வெப்ப வேறு பாட்டுத் தன்மையைப் பயன்படுத்தி மின் சக்தி உற்பத்தி செய்யும் முயற்சியில் தமிழ்நாடு மின்சார வாரியம் ஈடுபட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அம்முயற்சியில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.